புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,

Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061

Cell: 7810068421,9488420449

neethiPress@ gmail.com

ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 100 | 15-10-2026 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 02 | Issue: 100 | 15-10-2026 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் ஊதியம் தீபாவளி போனஸ் ஆக அறிவிப்பு

புதுடெல்லி: அக்.15

தீபாவளிப் பண்டிகைக்காக ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் ஊதியம் போனஸாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

தீபாவளி, தசரா, துர்கா பூஜை பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ரயில்வே ஊழியர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் போனஸ் வழங்கப்படும்.

இந் நிலையில், ரயில்வே ஊழியர்களுக்கு போனஸ் வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அதன்படி சுமார் 11.40 லட்சம் ரயில்வே ஊழியர்களுக்கு போனஸ் அளிக்க ரூ.2,009 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக ரூ.17,951 போனஸ்

இதன்மூலம் தகுதியுள்ள ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாட்களுக்கு நிகரான ஊதியத்தை போனஸாக வழங்கப்படும். அதிகபட்சமாக ஓர் ஊழியர் ரூ.17,591 வரை பெறக்கூடும்.

இந்த தீபாவளி போனஸ் ரயில்வேயில் பணியாற்றும் தண்டவாளப் பராமரிப்பாளர்கள், ஓட்டுநர்கள், கார்டுகள், ஸ்டேஷன் மாஸ்டர்கள், மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள், ரயில்வே அமைச்சக ஊழியர்கள் மற்றும் இதர சி பிரிவு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

வழக்கம்போல் துர்கா பூஜை, தசரா பண்டிகை விடுமுறைக்கு முன்னதாக இந்த போனஸ் வரவு வைக்கப்படும் எனத் தெரிகிறது.

ரயில்வே ஊழியர்களை ஊக்கப்படுத்தி இன்னும் சிறப்பாக செயல்படவைக்கும் நோக்கத்தில் இந்த போனஸ் வழங்கப்படுவதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், 2025 2026ம் ஆண்டில் ரயில்வே 1670 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டுள்ளதோடு, 740 கோடி பயணிகளையும் கையாண்டுள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## சென்னையில் ரூ.3,108 கோடியில் பிரதான சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டம்: முதல்அமைச்சர் விஜய் அடிக்கல் நாட்டினார்...

சென்னை. அக்.15–

சென்னையில் ரூ.3,108 கோடியில் பிரதான சுற்றுக்குழாய் அமைக்கும் திட்டம்: முதல் அமைச்சர் விஜய் அடிக்கல் நாட்டினார் சென்னை,சென்னை மக்களுக்கு ஏரிகள், நிலத்தடி நீர் ஆதாரங்கள்,கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் ஆகியவற்றில் இருந்து 84 குடிநீர் வினியோக நிலையங்களில் இருந்தும் பிரதான குழாய்கள் மூலம் 120 கோடி லிட்டர் குடிநீர் வினியோகம் செய்ய வகை வழிவகை செய்யும் வகையில் தனித்தனியாக அதற்கான குழாய்கள் அமைக்கும் பணிக்கு இன்று முதல் அமைச்சர் விஜய் அடிக்கல் நாட்டியுள்ளார். .இக்கட்டான காலங்களில் ஒரு பகுதியில் நீர் பற்றாக்குறை இருந்தால் மாற்று பகுதியில்




இருந்து அந்த தேவையான பகுதிக்கு நீரை அனுப்புவதற்கு உண்டான திட்டமாக'பிரதான சுற்றுக்குழாய் திட்டம்' சென்னை குடிநீர் வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ளது..சுற்றுக்குழாய் திட்டம்இதற்கு 40 கோடி லிட்டர் திறன் கொண்ட தண்ணீரை குடிநீராக்கும் திட்டத்தையும் சேர்த்து 9 குடிநீர் ஆதாரங்கள் ஒரு வளையமாக இணைக்கப்படுகிறது. உந்து நிலையங்கள், குடிநீர் வினியோக குழாய்களை உள்ளடக்கியதாக இந்த திட்டம் 98 கி.மீ. தூரத்திற்கு துருப்பிடிக்காத ஸ்டீல் குழாய்கள் பதிக்கப்பட உள்ளது. மேலும் நாளொன்றுக்கு 1762 மில்லியன் லிட்டர் குடிநீரைக் கையாளும் வகையில் சுற்றுக்குழாய் திட்டம் வடிவமைக்கப்பட உள்ளது..அடிக்கல் நாட்டிய முதல்அமைச்சர்இந்த பணிகள் எல்லாம் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியோடு சேர்த்து ரூ.3,108 கோடி மதிப்பீட்டில்செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதையடுத்து சோழிங்கநல்லூரில் நேற்று (புதன்கிழமை) மாலை, தமிழக முதல்அமைச்சர் விஜய், அங்கு வைக்கப்பட்டிருந்த மணலை அள்ளிப்போட்டும், மரக்கன்று நட்டியும் இந்த திட்டத்தை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த விழாவில் அமைச்சர்கள் சிலர் மற்றும் குடிநீர்த் துறை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

## எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்2 பொதுத்தேர்வுகள் அட்டவணை: அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்



சென்னை, அக்.15–

எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 பொதுத்தேர்வுகளுக்கான அட்டவணை கல்வியாண்டின் இடையில் வெளியிடப்பட்டு வருகிறது. அதாவது பெரும்பாலும் அக்டோபர் மாதத்தில் வெளியிடப்படுகிறது. அந்த வகையில் 2027 மார்ச், ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ள எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்1 (அரியர்), பிளஸ்2 மாணவமாணவிகளுக்கான பொதுத்தேர்வுகள் அட்டவணையை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் நேற்று வெளியிட்டார்.. அதன்படி பிளஸ்2 மாணவர்களுக்கான பொதுத்தேர்வு தமிழ் மற்றும் மொழிப்பாடத் தேர்வுடன் மார்ச் 3ந்தேதி தொடங்கி மார்ச் 29ந்தேதி வரை நடைபெறுகின்றன. செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 8 முதல் பிப்ரவரி 18 வரை நடைபெறுகின்றன. பிளஸ்1 (அரியர்) மாணவர்களுக்கான பொதுத்தேர்வுகள் மார்ச் 5ந்தேதி தொடங்கி ஏப்ரல் 1ந்தேதி வரை நடைபெறுகின்றன. இந்த தேர்வுகளுக்கான முடிவுகள் மே 7ல் வெளியாக வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது..எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களுக்கான பொதுத்தேர்வுகள் மார்ச் 17 முதல் ஏப்ரல் 12ம் தேதி வரை நடைபெறுகின்றன. பிப்ரவரி 19 முதல் பிப்ரவரி 26 வரை செய்முறைத் தேர்வுகள் நடைபெறுகின்றன. எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு முடிவு மே 20ல் வெளியாக வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.நடப்பு கல்வியாண்டில் சுமார் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்2 பொதுத் தேர்வுகளை எழுத இருக்கின்றனர்.

## தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்க கோரி இந்தியா கூட்டணி இன்று சென்னையில் ஆர்ப்பாட்டம்!

சென்னை: அக்.15–

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்க கோரி இந்தியா கூட்டணி நாளை சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. சென்னை எழும்பூரில் நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ், தவெக, விசிக, மதிமுக, ஐயூஎம்எல், சிபிஐ, சிபிஎம் பங்கேற்கிறது. தமிழக காங்கிரஸ் தலைவர், மாணிக்கம் தாகூர் எம்.பி. தலைமையில் நாளை ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்தியா கூட்டணி கட்சிகளுடைய ஆலோசனை கூட்டம் கடந்த மாதம் டெல்லியில் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி நீக்க வலியுறுத்தி தீர்மான நிறைவேற்றதோடு அது தொடர்பான தொடர் போராட்டங்கள் மாநில அளவில் முன்னெடுக்க வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

இந்நிலையில், இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமார் பதவி விலகல் தொடர்பாக இந்தியா கூட்டணியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சூழலில், எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி இந்தியா கூட்டணி சார்பில் சென்னை எழும்பூரில் நாளை ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவர், மாணிக்கம் தாகூர் எம்.பி. தலைமையில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தவெக சார்பில் அமைச்சர் ராஜ்மோகன், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, விடுதலை சிறுத்தை கட்சி தொல்.திருமாவளவன், ஐயூஎம்எல் தேசிய தலைவர் கே.எம். காதர் மொய்தீன், சிபிஐ கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், சிபிஎம் மாநில செயலாளர் பெ.சண்முகம் உள்ளிட்டோர் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

## அதிமுகவில் இருந்து 15 எம்எல்ஏக்கள் வருவார்கள்.. கே. ஏ. எஸ்... தவெகவில் இருந்து 20 எம்எல்ஏக்கள் வருவார்கள்.. ஈ. பி. எஸ்..

### கொங்கு மண்டல குரு.. சிஷ்யன் இடையே நடக்கும் அரசியல் காமெடி..

ஈரோடு. அக். 15

அதிமுகவில் இருந்து 15 எம்எல்ஏக்கள் விரைவில் வருவார்கள் என அமைச்சர் செங்கோட்டை எனும், 20 எம்எல்ஏக்களை தவெகவில் இருந்து தூக்குவேன் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் பேசி வருவது கொங்கு மண்டல அரசியலில், குருவுக்கும் சிஷ்யனுக்கும் நடக்கும் காமெடி அரசியல் என பொதுமக்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.





ஒரு காலத்தில் தமிழக அரசியலில் குருவாக செங்கோட்டையினும், சிசியனாக எடப்பாடி பழனிசாமியும் கருதப்பட்டார்கள். இருவரும் அதிமுகவில் இணைந்து பயணம் செய்த காலத்தில் இவ்வாறு அழைக்கப்பட்டார்கள்.

அதிமுகவை பொறுத்தவரை கொங்கு மண்டலம் என அழைக்கப்படும் மேற்கு மண்டல மாவட்டங்களில் எம்ஜிஆர் காலத்தில் இருந்தே செல்வாக்கு மிக்க பகுதியாக இருந்து வந்துள்ளது.

அதில்கொங்குமண்டலத்தில் அதிமுக வட்டாரத்தில் செல்வாக்கு மிக்க தலைவர்களாக செங்கோட்டையினும், எடப்பாடி பழனிசாமியும் இருந்து வந்துள்ளனர்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், செங்கோட்டையன் தவெகவில் இணைந்தார். தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்ற பொது தேர்தலில் கோபிசெட்டி பாளையம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர் தற்பொழுது விஜய் தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சராக உள்ளார்..

அதிமுகவின் பொதுச் செயலாளராக இருந்து வரும் எடப்பாடி பழனிசாமி எடப்பாடி தொகுதியில்போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தாலும் அதிமுக ஆட்சிக்கு வர முடியவில்லை. இந்த நிலையில் பழைய நட்பை மறந்துவிட்டு இருவரும் அரசியலில் இரு துருவங்களாக செயல்பட்டு வருவதோடு அவ்வப்போது தாக்குதல் அரசியலையும் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த தேர்தலில் அதிமுக சார்பில் வெற்றி பெற்ற ஆறு எம்எல்ஏக்கள் தவெகவில் இணைந்து விட்டனர். இதற்குக் காரணம் செங்கோட்டை தான் என கருதிய எடப்பாடி பழனிசாமி அவ்வப்போது அவர் மீது அரசியல் ரீதியான தாக்குதலை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் நடைபெற்ற முடிந்த தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தலிலும் தமிழக வெற்றி கழகம் வெற்றி பெற்றது. அதிமுக வசம் இருந்த இந்த இரு தொகுதிகளும் தற்போது தவெக வசம் சென்று விட்டதால், அதிமுகவில் உள்ள எம்எல்ஏக்கள் பலரும் தவெகவில் இணைய வாய்ப்புள்ளதாக பேசப்பட்டு வரும் நிலையில், அமைச்சர் செங்கோட்டையன் 15 அதிமுக எம்எல்ஏக்கள் விரைவில் தவெகவில் இணைய உள்ளனர் என பொதுவெளியில் பேசியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கு பதிலடி தரும் வகையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிதவெகவில் இருந்து 20 எம்எல்ஏக்கள் எங்கள் பக்கம் வருவார்கள் என பேசி வருகிறார்.

ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒருவர் அரசியல் காரணத்திற்காக மாற்றுக் கட்சியில் இணைவதை பெரும்பாலான அரசியல் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், செங்கோட்டையினும் எடப்பாடி பழனிசாமியும் எம்எல்ஏக்கள் அனு மாறி வருவார்கள் என்று பொதுவெளி யில் பேசி வருவது ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாக மாறி உள்ளது.

அரசியல் நாகரீகம் மிக்க தமிழகத்தில் இது போன்ற செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் வகையில் இரு கட்சிகளின் தலைவர்கள் பேசி வருவது பொதுமக்கள் மத்தியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

ஒரு காலத்தில் அதிமுகவில் குருவாகவும், சிசேனாகவும் இருந்து ஒன்றாக கைகோர்த்து அரசியல் செய்த இருவருக்கும் இடையே நடக்கும் அரசியல் காமெடியை பார்த்து பொது ஜனங்கள் எள்ளி நகையாடி வருகின்றனர்.

## சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிய நீதிபதிகள் நியமனம்: முதல்வர் விஜய் வாழ்த்து

சென்னை: அக்.15–

"நீதித்துறையின் மிக உயர்ந்த மரபையும், கண்ணியத்தையும் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ள கூடுதல் நீதிபதிகளின் பணி சிறக்கட்டும்," என முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு கூடுதல் நீதிபதிகளாக புதிதாகநியமிக்கப்பட்டுள்ள தர்மலிங்கம்லிங்கேஸ்வரன், பாலதண்டாயுதம் கார்த்திகேயன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

நீதியின் மாண்பையும், அரசியலமைப்பின் விழுமியங்களையும் பாதுகாக்கும் வகையில், நீதித்துறையின் மிக உயர்ந்த மரபையும், கண்ணியத்தையும் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ள தங்களின் பணி சிறக்கட்டும்" என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், வெங்கடாபுரம் ஊராட்சி, ஆஷாத் நகரில், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டம் சார்பாக, PM SURYA GHAR: MUFT BIJILI YOJANA, பிரதம மந்திரியின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தின் கீழ், பயனாளி .சுப்பிரமணியம், த/பெ.சின்னதம்பி அவர்களின் வீட்டில், 3.6 கிலோவாட் திறன் கொண்ட 2 சூரிய தகடுகள் ரூ.4 இலட்சத்து 40 ஆயிரம் திட்ட மதிப்பீட்டில், மொத்தம் மானியம் ரூ.2,00,000/ மதிப்பில் சூரிய தகடுகள் பொறுத்தப்பட்டு, வீட்டின் பயன்பாட்டிற்கு மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் செயற்பொறியாளர்கள் திரு.வ.ஜெகநாதன் (பொது/மத்திய அலுவலகம்), .பவுன்ராஜ், உதவி செயற்பொறியாளர்கள் .சிதம்பரம், நளினி, பிரேம் குமார் மற்றும் பயனாளிகள் உள்ளனர்.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சர்வதேச பேரிடர் குறைப்பு தினத்தை முன்னிட்டு பேரிடர் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் மாதிரி விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் பிரத்திக் தாயள்ருபவ் ஆய்வு மேற்கொண்டார்

திருச்சி. அக். 15–

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சர்வதேச பேரிடர் குறைப்பு தினத்தை முன்னிட்டு பேரிடர் பாதிப்புக் குள்ளாகக்கூடிய 11 வட்டங் களிலும் மாதிரி விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் பிரத்திக் தாயள் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.





* திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டத்தில் ஓடத்துறையிலும்
* திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டத்தில் உய்யகொண்டான் திருமலை, உறையூர் பகுதியிலும்
* திருவெறும்பூர் வட்டத்தில் சர்க்கார்பாளையம், வீதிவடங்கம் பகுதியிலும்,
* ஸ்ரீரங்கம் வட்டத்தில் மேலூர் பகுதியிலும்,
* மணப்பாறை வட்டத்தில் வெள;ளக்காள் பகுதியிலும்,
* மருங்காபுரி வட்டத்தில் துவரங்குறிச்சி பகுதியிலும்,
* இலால்குடி வட்டத்தில் கூர்;,மேட்டுப்பட்டி பகுதியிலும்,
* மண்ணச்சநல்லூர் வட்டத்தில் கரியமாணிக்கம் கிளியநல்லூரர்பகுதியிலும்,
* முசிறி வட்டத்தில் குணசீலம் மஞ்சக்கோரை வேப்பந்துறை பகுதியிலும்,
* துறையூர்; வட்டத்தில் சிக்கந்தம்பூர்; பகுதியிலும்
* தொட்டியம் வட்டத்தில் ஸ்ரீனிவாசநல்லூர் வரதராஜபுரம் ஆகிய பகுதிகளில் மாதிரி ஒத்திகை பயிற்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம் ஓடத்துறையில் நடைபெற்ற பாதுகாப்பு ஒத்திகை பயிற்சியினை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது :

காவேரி ஆற்றில் மிக அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் பொதுமக்கள் எவ்வாறு எதிர்கொள்வது என்பதை விளக்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி மற்றும் அதிக கன மழையினால் மரங்கள் விழுதல், மின்கம்பங்கள் விழுந்து விபத்து ஏற்படுத்துல் மற்றும் பாலங்கள் வெள்ளதால் சேதமடைதல் போன்ற இன்னல்களிலிருந்து பொதுமக்களை காப்பற்றி பாதுகாப்பு மையங்களில் தங்க வைத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற தடுப்பு நடவடிக்கைகளையும் வருவாய்த்துறை, பொதுப் பணித்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, மருத்துவத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளின் பங்களிப்புடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் உரிய மீட்புப்பணிகளை மேற்கொள்ளவும் அனைத்து அரசுத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்

இவ்வாய்வின் போது திருச்சிராப்பள்ளி கோட்டாட்சியர் சாலைதவவளன்திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டாட்சியர் ஷேக் முஜீப் , பொதுப்பணித்துறை செயற்பெரியாளர்,ராஜா, உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாட்டுப்புற கலைஞர்கள் நலச்சங்க மகளிர் அணி முதல் செயற்குழ கூட்டம்: அரசிடம் பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தல்



கிருஷ்ணகிரி. அக்.15–

தமிழ்நாடு கலைத்தாய் அனைத்து நாட்டுப்புற கலைஞர்கள் நலச்சங்கம் (கிருட்டிணகிரி தருமபுரி மாவட்டங்கள் இணைந்து) சார்பில் மகளிர் அணி முதல் செயற்குழு கூட்டம் மத்தூர் தனியார் திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிருட்டிணகிரி மாவட்ட மாநில செயலாளர் சங்கீதா தலைமை தாங்கினார். கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் கண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் கலை நண்பனின் சிவலிங்கம், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட பொருளாளர் கலை முதுமணி பழனியப்பன், மாவட்ட தலைவி ராமு, செயலாளர் பரிமளா, பொருளாளர் லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவின் சிறப்பு விருந்தினர்களாக விழுப்புரம் மாநிலத் தலைவர் கலைமாமணி காணை. சத்தியராஜ் மற்றும் கிருஷ்ணகிரி மாநில பொதுச் செயலாளர் கலைநன்மணி குப்புசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மேலும், மாநில மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பொறுப்பாளர்களும், மகளிர் அணி நிர்வாகி களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட முக்கிய கோரிக் கைகள்.பெண்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் வயது வரம்பை 60 என்பதிலிருந்து 50 ஆக குறைக்க வேண்டும். கும்மி, கோலாட்டம் உள்ளிட்ட நாட்டுப்புற கலைகளுடன் தொடர் புடைய கலைஞர்களுக்கு அரசு வழங்கும் அனைத்து உதவி உபகரணங்களையும் உடனடியாக வழங்க வேண்டும். ஓய்வூதியம் வழங்கும் முறையில் உள்ள காலதாமதங்களை தவிர்த்து, மாவட்ட ஆட்சியர் வழங்கிய அடையாள அட்டையில் உள்ள வயதை அடிப் படையாக கொண்டு ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்ய வேண்டும். இயல் இசை நாடக மன்றம் மூலம் வழங்கப்படும் 'கலை மாமணி' விருதினை தகுதியான சிறந்த நாட்டுப்புற கலைஞர் களுக்கு அனைத்து மாவட்டங்களுக்கும் முறையாக கிடைக்க செய்ய வேண்டும்.ஒரு கலைஞர் இயற்கை எய்தினால், அவரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் இயற்கை மரண நிதியை 1 லட்ச ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும்.

விழாவின் இறுதியில் அனைத்து நிர்வாகிகளும், உறுப்பினர்களும் ஒன்றிணைந்து சங்கத்தின் வளர்ச்சி குறித்தும், கலைஞர்களின் நலன் காப்பது குறித்தும் விவாதித்து கூட்டத்தை இனிதே நிறைவு செய்தனர்.

# கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா ஆய்வு

திருவள்ளூர் அக் 15 :

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சி கண்ணையா நகர் அலமேலு தெரு பகுதியில் கூட்டுறவு பண்டகசாலையின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடையில் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா திடீர் ஆய்வு மேற்கொண்டு,பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து ஆய்வு செய்து, வெங்கத்தூர் கண்டிகை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும், நுங்கம்பாக்கம் ஊராட்சி கம்மவார் பாளையம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறையின் சார்பில் பெருந்தலைவர் காமராசர் காலை உணவு திட்டம் தொடர்பாக நேரில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவின் தரம் மற்றும் பள்ளி சமையலறைக் கூடத்தை



பார்வையிட்டு சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர் களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, மேல்நல்லாத்தூர் ஊராட்சியில் சமூக நீதி துறையின் கீழ் இயங்கும் அரசினர் சமூக நீதி கல்லூரி மாணவர் விடுதியில் மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு மேற்கொண்டு, நுங்கம்பாக்கம் ஊராட்சி கம்மவார்பாளையம் கிராமத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையத்தினை திடீர் ஆய்வு மேற்கொண்டு, சமையலறைக் கூடத்தை பார்வையிட்டு, குழந்தைகளுடன் கலந்துரை யாடினார்.

மேலும், நுங்கம்பாக்கம் ஊராட்சியில் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை சார்பில், நுங்கம்பாக்கம் நுண் உரக்கூடம் பகுதியில் 5 மெடன் மீத்தேன் ஆக்க ஆலை செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, கொண்டஞ்சேரி சத்தரை ஊராட்சி பகுதியில் நெடுஞ் சாலைகள்துறை சார்பில் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் சுமார் 200 மீ நீளம் கட்டப்பட்டு வரும் உயர்மட்ட பாலம் கட்டுமானப் பணிகளையும், தண்டலம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.17.20 கோடி மதிப்பீட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் உயர்மட்ட மேம்பாலம் கட்டுமானப் பணிகளையும் நேரில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதில் மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர் கலைச்செல்வி, நகராட்சி சுகாதார அலுவலர் மோகன், வட்ட வழங்கல் அலுவலர் விஜய், விடுதி காப்பாளர், வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இருக்கும் போது
ரத்ததானம்.... இறந்த பின்
கண்தானம் செய்வீர்...

# இளம் வாசிப்பு மன்றம் தொடக்க விழா..!



வந்தவாசி, அக் 15:

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் அடுத்த சி.ம.புதூர் கிளை நூலகம் சார்பில் கிழங்குணம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இளம் வாசிப்பு மன்றம் தொடக்க விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொறுப்பு தலைமை ஆசிரியர் பெ.சரவணன் தலைமை வகித்தார். ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ப.சக்கரவர்த்தி முன்னிலை வகித்தார். சி.ம.புதூர் கிளை நூலகர் ஜா.தமீம் பங்கேற்று, வாசிப்பு மன்றத்தை தொடங்கி வைத்து மாணவர்களுக்கு வாசிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேலும் மாணவர்கள் விடுமுறையில் அருகில் உள்ள சி.ம.புதூர் கிளை நூலகம் சென்று குழந்தைகளுக்கான புத்தகங்கள் வாசிக்க வேண்டும் எனவும், சிறுவயதில் இருந்து நூலகம் செல்வதால் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கலாம் என அறிவுறுத்தினார்.

# பரமக்குடியில் காலை முதல் லேசான மழை: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

பரமக்குடி: அக்.15–

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று காலை முதலே லேசான மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

திடீரென பெய்து வரும் இந்தத் தொடர் லேசான மழையின் காரணமாக, பரமக்குடி நகரின் முக்கிய வீதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் லேசான நீர் தேங்கியுள்ளது. இதனால் காலை நேரங்களில் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவமாணவியர்களும், பணிக்குச் செல்லும் தொழிலாளர்களும், வியாபாரிகளும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

போக்குவரத்து பாதிப்பு: இருசக்கர வாகன ஓட்டிகள் மழை மற்றும் ஈரமான சாலைகள் காரணமாக மெதுவாகச் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அன்றாட பணிகள் மந்தம்: தொடரும் மேகமூட்டம் மற்றும் குளிர்ந்த காற்று காரணமாக பொதுமக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை சற்று மந்தமடைந்துள்ளது. வானிலை மாற்றத்தின் காரணமாகப் பெய்து வரும் இம்மழையினால், பொதுமக்கள் தேவையின்றி வெளியேறுவதைத் தவிர்த்து தேவையான முன்னேற்பாடுகளுடன் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# பிறப்பு இறப்பு சான்றிதழ் கேட்டு அலையும் அவல நிலை.

மணப்பாறை அக் 15

திருச்சி மாவட்டம் மணப்பாறை வையம்பட்டி மருங்காபுரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஏராளமான கிராம பகுதிகளில் உள்ளன இங்கு உள்ளோர் ஏராளமானோர் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர் உறவினர் மற்றும் குழந்தைகள் தாய் மற்றும் தந்தையருக்கு பிறப்பு இறப்பு சான்றிதழ் வாங்குவதற்காக பல மாதங்களாக கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் கிராம நிர்வாக அலுவலர்கள் இடம் சென்று வந்த வண்ணம் உள்ளனர் சம்பந்தப்பட்ட பொதுமக்களுக்கு பிறப்பு இறப்பு சான்றிதழ் கிடைக்காமல் இன்று போய் நாளை வா என்று கூறி பல மாதங்களாக இழுத்தடிப்பதாக பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் சாட்டி வருகின்றனர் தங்களுக்கு கிடைக்கக்கூடிய பிறப்பு இறப்பு சான்றிதழ் கூட வாங்க முடியாமல் அலைகழிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர் மாவட்ட நிர்வாகம் போர்க்கால நடவடிக்கை எடுத்து கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் கிராம நிர்வாக அலுவலர்களிடம் அலைகழிக்கப்படாமல் பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டாக்டர் அப்துல் கலாமின் 95 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு முப்பெரும் விழா: புதுவை தமிழ்ச் சங்க தலைவர் பங்கேற்பு





வந்தவாசி, அக் 15:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் அவர்களின் 95 ஆவது பிறந்த நாள் முன்னிட்டு முப்பெரும் விழா (101 மரக்கன்றுகள் நடும் விழா, கலாம் கண்ட கனவு உரையரங்கம், பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு பரிசளிப்பு) உள்ளிட்டவைகளாக நடைபெற்றது. தேசூர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு) சி.செந்தில் குமார் தலைமை தாங்கினார். நல்லாசிரியர் ராஜவேலு, பள்ளி வளர்ச்சி குழு தேசூர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, புதுவை தமிழ்ச் சங்க தலைவரும், தெள்ளாறு இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரி தலைவருமான கலைமாமணி முனைவர் வி.முத்து பங்கேற்று, கலாம் கண்ட கனவு என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். மேலும் கலாம் கண்ட கனவை மாணவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் பேச்சு, ஓவியம், கட்டுரை, கவிதை உள்ளிட்ட பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. தேசூர் ஊராட்சி ராதா ஜெவீர பாண்டின், சமூக ஆர்வலர்கள் ராஜபாண்டியன், கிருஷ்ணவேணி கணினி ஆசிரியர் பா.சுரேஷ், நல்நூலகர் ஜா.தமீம் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்வில் கலைஞர் முத்தமிழ் சங்க தலைவர் வந்தை குமரன், விடுதி காப்பாளர் ஆர்.எஸ்.சிவக்குமார், ஓய்வுபெற்ற கருவூல அதிகாரி சத்யமூர்த்தி, ஓய்வுபெற்ற டிஇஓ பிஏ ஜெயக்கண்ணு, ரெட் கிராஸ் சங்க உறுப்பினர் அ. ஷாகுல் அமீது, குறும்பட துணை இயக்குனர் முகமது ஜியா உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள் பலரும் பங்கேற்றனர். முன்னதாக பள்ளி வளாகத்தில் கலாமின் பிறந்தநாள் மரக்கன்றுகள் நடப்பட்டது. இறுதியில் முதுகலை ஆசிரியர் கா.சிவசங்கரி நன்றி கூறினார்.

# விண்ணை முட்டும் விலைவாசி உயர்வை அரசு கட்டுப்படுத்தாவிட்டால் ஆர் எல் வி அனுமதியுடன் விரைவில் போராட்டம்.!!!.

## ஆர்.எல். வி மக்கள் முன்னேற்ற கழகம் காமராஜர் நகர் தொகுதி எஸ். கே. ஆர். செல்வக்குமரன் அறிக்கை



புதுச்சேரி. அக். 15–

புதுச்சேரி மாநிலம் ஆர். எல் .வி .மக்கள் முன்னேற்ற கழகம் காமராஜர் நகர் தொகுதி நிர்வாகி எஸ் கே ஆர் செல்வ குமரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது .

நாட்டில் தற்போது என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை

விலைவாசி விண்ணை முட்டுகிறது. அரிசி விலை, வெங்காயம் விலை, தக்காளி விலை, இன்று விஸ்வரூபம் எடுத்து விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது. இதற்காக ஆர் எல் வி மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த அரசாங்கத்தை இந்த விலை உயர்வுக்காகதான் நாம் தேர்ந்தெடுத்தோமா?

என்று நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிற நிலை ஏற்படுகிறது.

அரிசி விலை ரூபாய் 60 லிருந்து 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை 120 வரை தொடும் என்று கூறுகிறார்கள். பொதுமக்களிடம் வாக்காளரிடம் நான் கேட்பது ஒன்றுதான். பணம் பெற்றுக் கொண்டு ஏன் இந்த அரசை உருவாக்கினீர்கள் என்று எனக்கு தெரியவில்லை இது மிகவும் மன வருத்தத்தை உருவாக்குகிறது. நாளை ஒரு சாமானியன் இந்த நாட்டில் வாழ முடியுமா என்ற கேள்விக்குறி மக்கள் மனதில் எழுந்துள்ளது. பணக்காரர்கள் அரிசியை வாங்கி கொள்வார்கள் ஏழைகள் என்ன செய்வார்கள் இந்த ஏழைகளைப் பற்றி யார் சிந்திக்கிறார்கள் அன்றாட கூலி வேலை செய்யும்

மக்கள் எங்கே போவார்கள்? தக்காளி விலை மூன்று கிலோ 100 ரூபாய், வெங்காயம் விலை ஒன்றரை கிலோ 100 ரூபாய், அரிசி விலை அதற்கு மேல், என்ன நடக்கிறது நாட்டில் என்றே தெரியவில்லை அந்த அளவுக்கு விலைவாசி உயர்வு மக்களை வாட்டி வதைக்கிறது. நாட்டில் மழை இல்லை வெயில் கொளுத்துகிறது. இந்த நிலைமை எங்கே போய் என்ன நடக்கப் போகிறது என்றே தெரியவில்லை.

இதில் கார்ப்பரேட் முதலாளிகள் கடைகள் ஒரு பக்கம். இந்த தீபாவளிக்கு நான் மக்களிடம் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது ஒன்றுதான். உங்கள் வீட்டின் அருகில் உள்ள சிறிய கடைகளில் பொருட்களை வாங்குங்கள். சிறிய கடைகளில் பொருட்கள் வாங்கினால் உங்களுக்கு கடன் கூட தருவார்கள். இதற்கு பதிலாக நீங்கள் தனியார் பெரிய கார்ப்பரேட் கடைகளுக்கு சென்றால் தள்ளுபடி கொடுப்பதாக கூறுவார்கள். ஆனால் தள்ளுபடி எல்லாம் கிடையாது தள்ளுபடி கொடுப்பது போல் உங்களை நம்ப செய்கிறார்கள். நீங்களும் அங்கே போய் தான் விழுகிறீர்கள். பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கடையில் பணம் கொடுத்து தான் வாங்க வேண்டும். கடன் கொடுப்பார்களா? கடன் கொடுக்க மாட்டார்கள். கடன் கிடையாது. இது ஏன் மக்கள் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்.ஆனால் நமது வீட்டின் அருகில் உள்ள சிறிய கடைகளில் நீங்கள் பொருட்கள் வாங்கும் போது உங்களுக்கு கடன் கூட சந்தோஷமாக கிடைக்கும். நீங்கள் நமது சாமானிய மக்களுக்கு உதவுவதற்கு முன் வருவதில்லை இது வருத்தப்படக் கூடிய விஷயம் ஆகும். நம்மை ஏமாற்றுகின்ற நமக்கு கடன் கொடுக்காத கார்ப்பரேட் முதலாளிகளுக்கு மீண்டும் மீண்டும் திரும்ப சென்று பணத்தை கொடுத்துக் கொண்டு பொருட்கள் வாங்குவது நாம் நம்மை ஏமாற்றுவதற்கு சமம். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தயவு செய்து இதே போல் வாழும் வாழ்க்கையை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த விலைவாசி உயர்வு உடனடியாக அரசு போர்க்கால நடவடிக்கையாக விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறினால் ஆர் எல் வி மக்கள் முன்னேற்ற கழகம் நிறுவன தலைவர் ஆர். எல். வெங்கட்ராமன் அவர்களின் அனுமதி பெற்று மாபெரும் போராட்டத்தை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று அரசுக்கு எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறோம்.

# செஞ்சி அருகே 2ம் வகுப்பு சிறுமி மாயம்: 3ம் நாளாக தீவிர தேடுதல்

## எம்.பி. தரணி வேந்தன் நேரில் ஆறுதல், போலீசாருக்கு கடும் கண்டனம்.



விழுப்புரம். அக்.15–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள ஆலம்பூண்டி கிராமம் குளக்கரை தெருவைச் சேர்ந்த கூலித் தொழிலாளி வடிவேலு பவானி தம்பதியினரின் 7 வயது மகள் ஹேமாவதி, ஆலம்பூண்டி அரசு தொடக்கப்பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த 11ம் தேதி பிறந்த நாள் கொண்டாடப்பட்ட சிறுமி, மறுநாள் அதிகாலை வீட்டு திண்ணையில் படுத்து உறங்கியபோது திடீரென மாயமானார். இது குறித்து சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன் நேரில் சென்று விசாரணை நடத்தி தேடுதல் பணியை துரிதப்படுத்தினார். இதையடுத்து நேற்று 2வது நாளாக 2 துணை கண்காணிப்பாளர்கள் தலைமையில் காவல் ஆய்வாளர்கள், தனிப் பிரிவு போலீசார் உட்பட 50க்கும் மேற்பட்ட போலீசார் கொண்ட 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு டிரோன் கேமரா உதவியுடன் தேடுதல் வேட்டை தொடங்கியது. 3வது நாளான இன்றும் அதே தனிப்படை போலீசார் வீட்டைச் சுற்றியுள்ள விவசாயக் கிணறுகள், குட்டைகள், புதர்கள் மற்றும் அருகிலுள்ள மலைப்பகுதி குகைகளில் சல்லடை போட்டு தேடி வருவதுடன், கிராமம் மற்றும் செஞ்சி நகரப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்து வருகின்றனர். உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்களிடமும் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. ஆனால் 3 நாட்களாகியும் எந்த தடயமும் கிடைக்காததால் போலீசார் திணறி வருகின்றனர். இந்நிலையில் இன்று ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணி வேந்தன் ஆலம்பூண்டி கிராமத்திற்கு நேரில் சென்று சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், வீட்டு திண்ணையில் உறங்கிய குழந்தை காணாமல் போய் 4 நாட்கள் ஆகியும் போலீசார் தகுந்த நடவடிக்கை எடுக்காதது வேதனை அளிக்கிறது, செய்திகள் மூலம் அறிந்து நாங்களே வந்து விசாரிக்கும் நிலை உள்ளது, மாநிலத்தில் பெண்கள் பாதுகாப்பு, சிங்கப்பெண் பாதுகாப்பு என பேசும் நிலையில் குழந்தைகள் மீதான பாலியல் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன, 4 நாட்களாக சிறுமி காணாமல் போன பிறகும் போலீசாரும் அரசும் மெத்தனமாக செயல்படுவது தெரிகிறது, ஸ்காட்லாந்து யார்டு போலீசுக்கு இணையானது என பெருமை பேசும் தமிழக போலீஸ் குழந்தையை கண்டுபிடிக்க முடியாமல் திணறுவது ஏன், சிறுமி உயிரோடு இருக்கிறாரா, உணவின்றி எங்கு தவிக்கிறாரா, யாரேனும் கடத்தி பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுத்தியுள்ளனரா என தீவிரமாக ஆராய வேண்டும், சி.சி.டி.வி. காட்சிகளை முழுமையாக ஆய்வு செய்து குழந்தையை உயிரோடு மீட்க வேண்டும், இல்லையெனில் தொகுதி மக்கள் சார்பில் கடும் போராட்டம் நடத்தப்படும் என்றார். அப்போது தி.மு.க. நிர்வாகிகள், கிராம மக்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், பனகஹள்ளி கிராமம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் மற்றும், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்ச்செல்வி அவர்கள், ஆகியோர் (14.10.2026) பெற்று, குறைகளை கேட்டறிந்தார்கள். உடன் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.

# அறிவிப்பு | AIMIM – புதுச்சேரி



அகில இந்திய மஜ்லிஸ்–இ–இத்திஹாதுல் முஸ்லிமீன் (AIMIM) கட்சியின் தேசியத் தலைவர் பாரிஸ்டர் அசதுத்தீன் ஒவைசி, M.P. அவர்களின் ஒப்புதலுடன், பொறுப்பாளர் ரஹ்மத்துல்லாஹ் தைய்யூப் அவர்களின் சார்பில், புதுச்சேரி மாநிலப் பொறுப்பாளராக அட்வகேட் S. சாகுல் ஹமீது அவர்கள் இன்று தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

புதுச்சேரியில் கட்சியின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லவும், கட்சியின் கொள்கைகள் மற்றும் நோக்கங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், மக்கள் நலனுக்காகச் சிறப்பாகப் பணியாற்றவும் அவருக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒற்றுமையுடன் செயல்படுவோம்!

மக்கள் நலனுக்காகப் பாடுபடுவோம்!

AIMIM– அகில இந்திய மஜ்லிஸ்–இ–இத்திஹாதுல் முஸ்லிமீன்



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சுற்றுலாத் துறை சார்பாக மாவட்ட சுற்றுலா வளர்ச்சிக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சளா, மாவட்ட வன அலுவலர் .என்.ஜெயராஜ் இ.வ.ப, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் உமா மகேஸ்வரி, உதவி ஆட்சியர் (பயிற்சி) சாய் சைதன்யா ஜாதவ் இ.ஆ.ப., மாவட்ட சுற்றுலா அலுவலர் .கார்த்திக் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் 121 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகள் : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா வழங்கினார்




திருவள்ளூர் அக் 15 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மாவட்ட நலச்சங்கம் வாயிலாகத் மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 121 செவிலியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ச.கவிதா பணிநியமன ஆணைகளை வழங்கி, தேசிய நலக்குழுமத்தின் சார்பில் செவிலியர் களுக்கு ஒரு நாள் பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, தேசிய நலக்குழுமத்தின் சார்பில் செவிலியர் களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில், தாய்சேய் நலப் பணிகள், தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள், தொற்றா நோய் களுக்கான பரிசோதனைகள் மற்றும் அரசு சுகாதாரத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துதல் தொடர்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சிக் கூட்டத்தில் நாய் கடி மற்றும் பாம்பு கடி ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய முதலுதவி மற்றும் அவசர மருத்துவ மேலாண்மை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் செவிலியர்கள் தங்களது பணிகளைப் பொறுப்புடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் மேற்கொண்டு, பொதுமக்களுக்கு தரமான சுகாதாரச் சேவைகளை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இப்பயிற்சி கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட சுகாதார அலுவலர் பிரியாராஜ், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மகப்பேறு மருத்துவர் அன்னி, மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஓசூர் அருகே நடந்த கொலை வழக்கில் 5 பேருக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

கர்நாடக மாநிலம் பெங்களூர் மங்கம்மா பாளையத்தைச் சேர்ந்தவர் முகமது இம்ரான் (32). இவர் கடந்த 2021ம் ஆண்டு கெலமங்கலம் அருகில் உள்ள தொட்டபேளூரைச் சேர்ந்த காணுபி என்கிற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். கணவன் மனைவிடையே ஏற்பட்ட குடும்பப் பிரச்சனை காரணமாக, திருமணம் நடந்து ஆறு மாதங்களிலேயே அவர்கள் தனித்தனியாக வாழ்ந்து வந்தனர். தாய் வீட்டில் இருந்த மனைவி காணுபியை மீண்டும் தன்னுடன் சேர்த்து வாழுமாறு முகமது இம்ரான் உறவினர்களிடம் பலமுறை கேட்டுள்ளார். ஆனால், காணுபிக்கு அதில் விருப்பம் இல்லாததால் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார்.

இந்நிலையில், கடந்த 13.07.2021 அன்று பேச்சுவார்த்தைக்குச் சென்றபோது, காணுபியின் உறவினர்களான சித்திக் (28), மாலிக் (24), சானுசயிப் (19), ரகுமான் (23), மற்றும் ஜமீர் (32), ஆகிய ஐந்து பேரும் சேர்ந்து முகமது இம்ரானை உருட்டுக் கட்டையால் தாக்கியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த முகமது இம்ரான், தேன்கனிக்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அடுத்த நாள் 14ம் தேதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பாக கெலமங்கலம் போலீஸார் வழக்கு பதிவு செய்து 5 பேரை கைது செய்தனர். மேலும் இந்த வழக்கு ஓசூர் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணை நிறைவு பெற்ற நிலையில் நீதிபதி சந்தோஷ், குற்றம்சாட்டட 5 பேருக்கும் ஆயுள் தண்டனையும் ஒவ்வொருவருக்கும் தலா 4500 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

# பண்ருட்டி அருகே 100 நாள் வேலைப் பணியில் இருந்தவர்களை கதண்ட வண்டு கொட்டியதில் 12 பேர் காயம்!

கடலூர்: கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்த மாளிகைமேடு பகுதியில் உள்ள வாய்க்காலில் 100 நாள் வேலைப் பணியில் இருந்தவர்களை கதண்ட வண்டு கொட்டியதில் 12 பேர் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கோவையில் இந்து முன்னணி சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு



கோவை.அக். 15–

கோவை மாநகராட்சி 4வது வார்டுக்கு உட்பட்ட சங்கரா கல்லூரி,வேட்டைக்காரன் கோவில் அருகே உள்ள ஆம்ரோஸ் நகர் குடியிருப்புப் பகுதியில், புதிய கட்டிடம் கட்டப்பட்டபோதே அது சர்ச் ஆகப் பயன்படுத்தப்பட உள்ளதாகத் தகவல் கிடைத்ததாகக் கூறி இதற்கு முன்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனு அளிக்கப்பட்டது.

ஆனால்,இதுவரை மாநகராட்சி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், தற்போது அங்கு கிறி சர்ச் என்ற பெயர்ப் பலகை வைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ள தாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கோவை கீரணத்தம் பகுதியில் ஆதிதிராவிடர் நத்தம் நிலத்தில் போலி பட்டா மூலம் CSI சர்ச் கட்டப்பட்டதாகக் குற்றம்சாட்டி, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் வாயிலாகப் பெறப்பட்ட ஆவணங்களையும் ஆதாரமாக வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட புகார்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மீண்டும் புகார் மனு அளிக்கப்பட்டது.

இந்த மனுவை மாவட்டச் செயலாளர் ஆர்.வி.ஜீவானந்தம், மாவட்டச் செய்தித் தொடர்பாளர் சி.தனபால்,நகரத் தலைவர் ரஞ்சித்,பாலசுப்பிரமணியம் மற்றும் நகரப் பொதுச்செயலாளர் சந்தோஷ்குமார் ஆகியோர் இணைந்து அளித்தனர்.

# மணப்பாறையில் 400 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா!

## சட்டமன்ற உறுப்பினர் ரா. கதிரவன் பங்கேற்று வளைகாப்புச் சீர்வரிசை மற்றும் ஊட்டச்சத்து பொருட்களை வழங்கினார்






மணப்பாறை: அக்.15–

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 400 கர்ப்பிணிப் பெண்கள் பங்கேற்ற சமுதாய வளைகாப்பு விழா தனியார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் ரா. கதிரவன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்புச் சீர்வரிசைப் பொருட்கள், ஊட்டச்சத்து உணவு வகைகள் மற்றும் ஊட்டச்சத்து மாவு உள்ளிட்ட நலத்திட்டப் பொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் ரா. கதிரவன், கர்ப்பிணிப் பெண்களின் உடல்நலத்தையும், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தையும் பாதுகாப்பது மிகவும் அவசியமானது என்றும், கர்ப்பிணிப் பெண்கள் சத்தான உணவுகளை உட்கொண்டு, மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றி தங்களது உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், பெண்களின் பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது குறித்தும், தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சிப் பணிகள் மற்றும் பெண்கள் நலன் தொடர்பான கருத்துகளையும் அவர் எடுத்துரைத்தார்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அதிகாரிகள் மேற்கொண்டனர். நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, மாவட்ட விவசாய அணியைச் சேர்ந்த மாயவன், மணப்பாறை நகரக் கழகச் செயலாளர் கே.சி. திருப்பதி உள்ளிட்ட தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சமுதாய வளைகாப்பு விழாவில் 400 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். தாய்மார்களின் நலனையும், குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

# சேலம் ஓமலூரில் அதிமுக நிர்வாகிகளுடன் எடப்பாடி கே.பழனிசாமி ஆலோசனை.





சேலம். அக்.15–

சேலம் மாவட்டம் ஓமலூரில் உள்ள அதிமுக அலுவலகத்தில், அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இடைத்தேர்தல் முடிவுகள் குறித்து ஆலோசனை

நடந்து முடிந்த சட்டமன்ற இடைத்தேர்தல் முடிவுகள் தொடர்பாகக் கட்சி நிர்வாகிகளுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்துவதாகக் கூறப்படுகிறது. தேர்தல் முடிவுகள், தொகுதிகளில் கட்சியின் செயல்பாடு மற்றும் அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கைகள் குறித்து எதிர்பார்ப்பு

ஓமலூரில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டம் அதிமுக நிர்வாகிகளிடையே கவனம் பெற்றுள்ளது.

இடைத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து கட்சியின் அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்து எடப்பாடி பழனிசாமி நிர்வாகிகளுடன் ஆலோசிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில், கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்த எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# ஈரோட்டில் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒப்பந்தக்காரர்கள் சங்க மண்டலப் பொதுக்கூட்டம் நடைபெற்றது!






ஈரோடு. அக். 15

தமிழ்நாடு பொதுப்பணித் துறை (PWD) மற்றும் நீர்வளத்துறை (WRD) ஒப்பந்தக்காரர்கள் நல சங்கத்தின் கோவை மண்டலத்திற்கு உட்பட்ட 9 மாவட்டங்களை உள்ளடக்கிய முதல் மண்டலப் பொதுக்கூட்டம் நேற்று ஈரோடு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மண்டலத் தலைவர் சி.தில்லைராஜன் தலைமை தாங்கினார்.

ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத் தலைவர் பி. உதயகுமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சங்கத்தின் மாநிலத் தலைவர் டி. செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் சிந்தனை பேரவையின் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற நிர்வாகிகள் உரையைத் அடுத்து, ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில, மண்டல மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்று ஒப்பந்தக்காரர்களின் பல்வேறு கோரிக்கைகள், தொழில்துறை மேம்பாடு மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்த முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

இக்கூட்டத்திற்கான முழு ஏற்பாடுகளையும் ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட பொதுப்பணித்துறை நீர்வளத்துறை ஒப்பந்தக்காரர்கள் நலச்சங்கம் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தமிழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் செய்த 80% அரசு பணிகளுக்கு பணம் விடுவிக்க வில்லை எனக்கூறிய தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒப்பந்ததாரர்கள் 10கோடி ரூபாய் மதிப்பிலான அரசு பணிகளுக்கு ஆப் லைன் டெண்டர் விடவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்...

ஈரோட்டில் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் கோவை மண்டல அளவிலான ஒப்பந்ததாரர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் கோவை, ஈரோடு,நாமக்கல்,திருப்பூர் மாவட்டத்தில் அரசு பணிகளை ஒப்பந்தம் அடிப்படையில் செய்து வரும் ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர்.இந்த கூட்டத்திற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் கார்மேகம் காலம் மாறிவிட்டது காட்சிகள் மாறிவிட்டது அரசின் வெறுமனே ஏட்டளவில் மட்டும் உள்ளது அரசு உயர் அதிகாரிகள் சந்திக்க வேண்டாம் பொதுப்பணித்துறை செயலாளர் கூறுகிறார்,என பொதுப்பணித்துறை செயலாளரிடம் நியாயமான கோரிக்கை குறித்து பேச சென்ற போதும் சந்திக்க மறுப்பு தெரிவித்து வருகிறார் என்றார்,

ஒப்பந்த பணிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படாததால்

ஒப்பந்ததாரர்கள் கடந்த 4மாதகாலமாக மன உளைச்சலில் இருக்கிறார்கள், தமிழகத்தில் அனைத்து மாவட்டத்திலும் ஒப்பந்ததாரர் அவர்கள் இருக்கிறார்கள் மாவட்டத்தில் வேலை செய்வதற்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆஃப்லைன் டெண்டர் கொடுக்காமல் திடீரென ஆன்லைன் ஸ்பிளெண்டர் என்று சொல்வதன் மூலம்

வேலை பளுவை இழந்து இருக்கிறோம் கட்டுமான பொருட்களின் நிலையற்றத்தை அரசு கட்டுப்படுத்த தவறியதால்

கட்டுமான பொருட்கள் விலை 40% 70%வரை பேருந்துள்ளது

உரிய நடவடிக்கை எடுத்து உரிய வேலைகளை செய்ய அரசு ஒப்பந்ததாரர்களை அழைத்து கருத்து கேட்கவில்லை என்றால் மாநில அளவில் உண்ணாவிரதம் வேலைநிறுத்தம் போராட்டம் செய்ய போவதாக கூறினார். இதனை தொடர்ந்து பேசிய அவர்

போர்க்கள அடிப்படையில் நடை பெறக்கூடிய அரசு பணிகளுக்கு ஆஃப்லைன் டெண்டர் மூலமாகவும் தமிழகத்தில் ஒரு லட்சம் ஒப்பந்ததாரர்கள் வேலை செய்து வருகிறார்கள்,இதனால்

தர கட்டுப்பாட்டில் உள்ள அதிகாரிகள் தமிழகம் அளவில் தரக்கட்டுப்பாட்டை பரிசோதனை செய்ய 4பேர் மட்டுமே உள்ளனர், ஒப்பந்ததாரர்கள் வாழ்வாதாரம் பாதிக்க தர நிர்ணய அலுவலர்கள் தான் காரணம்.,

தரமற்ற வேலைகளை செய்ய எந்த ஒப்பந்ததாரர்களும் தயாராக இல்லை,

அரசின் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் 80%முடிந்த பணிகளுக்கு பணம் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கவில்லை அரசின் புதிய பணிகள் தற்போது வருவதில்லை, பொதுப்பணித்துறை அமைச்சர்

டாட்டா எல்என்டி நிறுவனம் போல ஒப்பந்ததாரர்கள் இருக்க வேண்டும் என நினைக்கிறார்

இது நடைமுறை சாத்தியம் இல்லை,அனுபவம் இல்லாமல் எப்படி அரசு ஒப்பந்தம் பணிகளை செய்ய முடியும்,20%தான் புதிய ஆட்சியில் ஒப்பந்தம் பணிகளை செய்ய ஒப்பந்தம் அறிவிப்பு வந்தது,800பேர் வரை ஒப்பந்ததாரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்,போர் கால அடிப்படையிலான பணிகளுக்கு கூட ஆப் லைன் டெண்டர் விடுவதில்லை என புகார் தெரிவித்தார்...

செய்தியாளர்கள் சந்திப்பின்போது மாநில பொதுச்செயலாளர் கார்மேகம், ஈரோடு அண்ட் திருப்பூர் மாவட்ட தலைவர் உதயகுமார் உடன் இருந்தனர்.

# கூட்டுறவு வங்கிகள் மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்: கூட்டுறவுத்துறை அறிவிப்பு

சென்னை: அக்.15–

கூட்டுறவு வங்கிகள் மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ரூ.1.80 லட்சம் கோடி கடன் வழங்கும் இலக்கை எய்தும் வகையில், வாரந்தோறும் சிறப்புக் கடன் முகாம்கள் மற்றும் கடன் மேளா நடத்தப்பட்டு வருகின்றன. இதன்படி, ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் சிங்கப் பெண்கள் கடன்கள் மற்றும் வீட்டு வசதிக் கடன்களுக்கான சிறப்பு முகாம்களும், வெள்ளிக்கிழமைகளில் இதர முன்னுரிமைத் துறைக் கடன் திட்டங்களுக்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட உள்ளன.

மேலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூ.50 கோடி மதிப்பிலான நீண்ட காலக் கடன்களும் (Long Term Loans) இச்சிறப்பு முகாம்களில் கூடுதலாக வழங்கப்பட உள்ளன. இதில் வேளாண் இயந்திர மயமாக்கல், குளிர் பதங்கிடங்குகள் அமைத்தல், கால்நடை வளர்ப்பு (கறவை மாடு, ஆடு, கோழி), மற்றும் அறுவடைக்கு பிந்தைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கடன்கள் வழங்கப்படும் . தகுதியுடைய உறுப்பினருக்கு அதிகபட்சமாக ரூ.30 லட்சம் வரை நீண்ட காலக் கடன் வழங்கப்படும். பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் (PCARDB) உரிய ஆவணங்களுடன் பங்கேற்றுப் பயனடையலாம்.

விண்ணப்பத்துடன் புகைப்படங்கள், அடையாளச் சான்று, முகவரிச் சான்று, KYC ஆவணங்கள் மற்றும் நில அடமான ஆவணங்களைச் சமர்ப்பித்திட வேண்டும். இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திப் பொருளாதார மேம்பாடு அடையக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கூடுதல் விவரங்களுக்கு 9884000845 என்ற வாட்ஸ்அப் எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் எனக் கூட்டுறவுத்துறையின் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

# கடலூர் சிப்காட் விரிவாக்கத்திற்கு எதிராக ஊர் பொதுமக்கள், மாணவர்கள் போராட்டம்!!



கடலூர்: அக்.15–

கடலூர் சிப்காட் விரிவாக்கத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள் என 100க்கணக்கானோர் கண்டன பேரணி நடத்தினர்.

கடலூர் மாவட்டம் தியாகவல்லி, நொச்சிக்காடு மட்டும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் சிப்காட் தொழில்பேட்டை விரிவிக்கப் பணிகளுக்காக விவசாயிகளின் விளைநிலங்களை கையகப்படுத்தும் முயற்சி தற்பொழுது நடைபெற்று வருகின்றன,தங்களின் வாழ்வாதாரமான விவசாய நிலங்களை, அரசு கையகப்படுத்துவதற்கு அப்பகுதி மக்களும், விவசாயிகளும் தொடர்ந்து கடுமையான எதிர்ப்பை பதிவு செய்துவருகின்றனர், மேலும் பல்வேறு போராட்டங்களையும் முன்னேடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தான் அதன் ஒரு பகுதியாக சிப்காட் விரிவாக்கத்துக்கு எதிர்ப்பு தெறித்து நொச்சிக்காடு, தியாகவல்லி கிராம மக்கள் சார்பாக எங்கள் நிலம், எங்கள் வாழ்க்கை, எங்கள் அடுத்த தலைமுறைக்காக என்ற முழக்கத்துடன், கடலூர் சிப்காட் விரிவாக்கத்தை எதிர்த்து கிராம மக்கள் சார்பாக கண்டன பேரணை நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் பங்கேற்றனர், நொச்சிகாடு கிராமத்தில் தொடங்கிய இந்த போராட்டம் வள்ளலார்நகர், நந்தன் நகர், நடுத்திட்டு, அம்பேத்கர் நகர்,பெரியார்நகர், தியாகவல்லி ஆகிய பகுதிகள் வழியாக சென்று திருச்சோபுரத்தில் நிறைவு பெற்றது.

தங்களின் வாழ்வாதார போராட்டத்தில் தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கவும், மாவட்ட ஆட்சியரின் கவனத்தை ஈர்க்கவுமே இந்த போராட்டம் நடைபெற்று வருகிறது, மேலும் நில எடுப்பு அரசனையே ரத்து செய்யும் வரையில் இந்த போராட்டம் தொடரும் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நில கையகப்படுத்தும் விவகாரத்தில் சிப்காட் கிராமத்தில் உள்ள அனைத்து கிராமத்தையும் ஒன்று சேர்த்து, மாபெரும் பெரிய போராட்டம் நடைபெறும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர், இந்த அரசாணை ரத்து செய்யும் வரை எங்கள் போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்துள்ளனர்.

# தீபாவளி பண்டிகையையொட்டி 95 சிறப்பு ரயில்கள் இயக்க தெற்கு ரயில்வே திட்டம்!

சென்னை: தீபாவளி பண்டிகையையொட்டி சொந்த ஊர் செல்வோரின் வசதிக்காக 95 சிறப்பு ரயில்கள இயக்க தெற்கு ரயில்வே திட்டமிட்டுள்ளது.சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்கு 20 இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.புவியியல் காண்

தமிழகத்தில் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகைக்காக அரசு சார்பில் சிறப்பு பேருந்துகள் மற்றும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவது வழக்கமாகும். அந்த வகையில், நிகழாண்டு வருகிற நவம்பர் 8ம் தேதி தீபாவளி பண்டிகை வெகு விமர்சையாக கொண்டாடப்பட உள்ளது. இதற்காக தமிழகத்தில் 95 சிறப்பு ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025ம் ஆண்டு நடைபெற்ற தீபாவளி பண்டிகைக்கு தெற்கு ரயில்வே சார்பில் நாடு முழுவதும் பல்வேறு ஊர்களுக்கு சுமார் 85 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. அந்த வகையில், இந்த ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு அதைவிட சற்று கூடுதலாக 95 சிறப்பு ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால், தீபாவளி பண்டிகை நேரத்தில் பயணிகளின் தேவையை பொறுத்து இந்த ரயில்களின் எண்ணிக்கை மாறுபட வாய்ப்புள்ளது. இதே போல, சென்னையில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, தென்காசி உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு சுமார் 20 சிறப்பு ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த 20 ரயில்களை தவிர சென்னையில் இருந்து திருநெல்வேலி. தூத்துக்குடி. கன்னியாகுமரி. நாகர்கோவில். மதுரை ஆகிய ஊர்களுக்கு கூடுதல் சிறப்பு ரயில்கள் இயக்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும். ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையின் போது சென்னை மாவட்டத்தில் இருந்து சுமார் 9 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்களுக்கு செல்கின்றனர்.

பெரும்பாலும் ரயில் பயணத்தையே விரும்புகின்றனர். பொதுவாக தீபாவளி பண்டிகைக்கு 2 மாதங்களுக்கு முன்னதாக முன்பதிவு தொடங்கி விடுகிறது. அந்த வகையில், எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்காக கடந்த செப்டம்பர் 6 ஆம் தேதி தொடங்கிய முன்பதிவு 9 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில், ஏராளமானோர் போட்டி போட்டு முன்பதிவு செய்ததால் சில நிமிடங்களிலேயே அனைத்து டிக்கெட்டுகளும் விற்று தீர்ந்தன. எனவே சொந்த ஊர்களுக்கு செல்வோர் வசதிக்காக தெற்கு ரயில்வே நிர்வாகம் சார்பில் 95 சிறப்பு ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992